செய்தி வெளியீடு எண்: 165 நாள் : 19.03.2016

**தேர்தல் விதி மீறி வாகன பிரச்சாரம் – 19.3.2016 வரை 1306 வழக்குகள்–உரிய ஆவணங்கள் இல்லாமல் 17.3.2016 வரை எடுத்துச் சென்ற தொகை ரூ.9,64 கோடி பறிமுதல் செய்யப்பட்டன.**

-----

தமிழ்நாட்டில் பொதுத்தேர்தல் நடைபெறுவதையொட்டி, தேர்தல் நன்னடத்தை விதிமுறை அமலில் உள்ளது. பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழுவினர் தமிழ்நாடு முழுவதும், கண்காணித்து உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லும் பணம், மற்றும் பொருட்களை பறிமுதல் செய்து வருகின்றனர். பறக்கும் படையினர் 17.3.2016 அன்று வாகன சோதனையில் ஈடுபட்டபோது, நாமக்கல் மாவட்டத்தில் ரூ.2.28 வட்சம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ3.9 லட்சம், சேலம் மாவட்டத்தில் ரூ.3.51லட்சம், விருதுநகர் மாவட்டத்தில் ரூ.2.66 லட்சம், மதுரை மாவட்டத்தில் 1.38 லட்சம் , புதுகோட்டையில் ரூ4.22 லட்சம் உட்பட மொத்தம் ரூ18.61 லட்சம், பறிமுதல் செய்யப்பட்டன. இதுவரை 3 கோடியே 68 லட்சத்து 73 ஆயிரத்து 397 ரூபாய் ரொக்கம் பறக்கும் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் விழுப்புரம் மாவட்டத்தில் 840 சுவர் கடிகாரங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் 177 கேஸ் ஸ்டவ், 1895 கேஸ் டியுப் மற்றும் மதுரை கோவை மாவட்டங்களில் மது வகைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

எந்தவித முன் அனுமதி பெறாமல் தனியார் வீடுகளுக்கு எதிரில் பிளக்ஸ் பேனர் வைத்தது, சுவரில் வாசகங்கள் எழுதியது, கட்சி கொடி கம்பம் அமைத்தது, மேம்பால சுவர்களில் கட்சி வாசகங்கள் எழுதியது கோவை இருகூர் ரயில்வே மேம்பால சுவரில் கட்சி வாசகங்கள் எழுதியது, கட்சி கொடி கம்பம் அனுமதியில்லாமல் அமைத்தது உட்பட பல்வேறு விதிமீறல்கள்தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டன.

நிலையான கண்காணிப்புக் குழுவினர் (Static Surveillance Team) சோதனையில், திருப்பூரில் ரூ1 லட்சம், வேலூரில் ரூ.3.55 லட்சம் என 17.3.2016 அன்று ரூ. 6.72 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டன. மொத்தம் ரூ.5,96,03.053/– ரொக்கம் இதுவரை கைப்பற்றப்பட்டன.

பொது சொத்துக்கு சேதம் விளைவிக்கும் வகையில் சுவர் விளம்பரம் தொடர்பாக 44,101 புகார்களும், போஸ்டர் ஒட்டியது தொடர்பாக 60,325 புகார்களும், பேனர் வைத்தது தொடர்பாக 17,916 புகார்களும் உட்பட 19.3.2016 முடிய 1,43,576 புகார்களும் தனியார் உடமைகளுக்கு சேதம் விளைவித்ததாக மொத்தம் 43064 புகார்களும் பெறப்பட்டன. பொது சொத்துக்கு சேதம் விளைவித்ததாக பெறப்பட்ட புகார்களில் 80,721 புகார்கள் சுவர் விளம்பரம் அழிக்கப்பட்டதால் முடிக்கப்பட்டன. இது போல தனியார் சுவர்களில் எழுதியதாக பெறப்பட்ட 18,819 புகார்களில் 14,990 புகார்கள் சுவர் விளம்பரம் அழிக்கப்பட்டதால் முடித்து வைக்கப்பட்டன. இது தொடப்பாக 690 வழக்குகளும், வாகனத்தை தவறாக பயன்படுத்தியது , ஒலிபெருக்கி வைத்தது போன்ற காரணங்களுக்காக 1306 வழக்குகளும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ப்பட்டுள்ளது.

-----------------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**